# திருவாரூர் மாவட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை

திருவாரூர், ஜன. 12 -

திருவாரூர் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்து மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அவர் தமது அறிக்கையில் கூறி இருப்பதாவது :-

திருவாரூர் மாவட்டச் செயல் வீரர்கள் கூட்டம் இன்று (12.01.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் திருவாரூர் வர்த்தகர் சங்க கட்டிடத்தில், மாவட்ட அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் சட்டமன்ற தொகுதிகளின் பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கூட்டத்தில் தமிழ் புத்தாண்டு பொங்கல் விழா, பாகநிலை முகவர்கள் நியமனம் மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசனைகள் நடைபெற இருக்கிறது.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### காங்கிரஸ் கட்சி போட்டியிடாது!

# ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.கழக வெற்றிக்குப் பாடுபடுவோம்!

## தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, ஜன.12-

ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி போட்டியிடாது என்றும், அத்தொகுதியில் இந்தியா கூட்டணியின் சார்பாக போட்டியிடும் தி.மு.கழக வேட்பாளரின் வெற்றிக்காக பாடுபடுவோம் என்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஈரோடு கிழக்கு தொகுதிக்கு வருகின்ற பிப்ரவரி 5ஆம் தேதி இடைத்தேர்தல் வரவிருப்பதை நாம் அனைவரும் அறிவோம், இந்த தொகுதியில் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் ஈ.வெ.கி.ச. இளங்கோவன் அவர்கள் மறைவு அடைந்ததையொட்டி இடை தேர்தல் வரவிருக்கிறது.

2026 சட்டமன்ற பொது தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்களே உள்ள நிலையில், முதல் அமைச்சர் மற்றும் இந்தியா கூட்டணியின் தமிழ்நாட்டின் தலைவராக விளங்கி கொண்டிருக்கும் மு.க. ஸ்டாலின் அவர்கள், முதல் முறையாக கேட்டுக்கொண்டதற்கு இணங்க அகில இந்திய காங்கிரஸ் தலைமை மற்றும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைமையின் தீவிர ஆலோசனைக்குப் பிறகு நாங்கள் அனைவரும் ஒரு மனதாக ஏற்றுக்கொண்டு, இந்தியா கூட்டணியின் சார்பாக ஈரோடு கிழக்கு தொகுதியின் இடைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர் போட்டியிடுவார் என்று இன்று உறுதி செய்யப்பட்டது.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தை பாதுகாக்க நாட்டில் ஜனநாயகம் மலரச்செய்ய நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்தியா கூட்டணியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட் பாளரை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்வோம்.

இவ்வாறு தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### அம்பத்தூர் தொகுதிக்குட்பட்ட வார்டுகளில்

# பாதாள சாக்கடை கட்டமைப்பு வசதிகள் அமைத்துத் தாரீர்!

## சட்டப்பேரவையில் – கழக உறுப்பினர் ஜோசப் சாமுவேல் வலியுறுத்தல்!

சென்னை, ஜன.12-

சட்டப்பேரவையில் அம்பத்தூர் தொகுதி கழக உறுப்பினர் ஜோசப் சாமுவேல் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் கே. என். நேரு அளித்த பதிலும் வருமாறு:-



**ஜோசப் சாமுவேல்:** அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, வார்டு எண் 83ல் அமைந்துள்ள மாதனகுப்பம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் வார்டு எண்கள் 79, 81, 82, மற்றும் 86 ஆகிய பகுதிகளில் சுமார் நானூறு தெருக்களுக்கு மேல் பாதாள சாக்கடை கட்டமைப்பு வசதிகளை அமைத்து கொடுக்க, கடந்த நிதியாண்டில் சுமார் ரூ.136 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நிதி ஒதுக்கப்படாத காரணத்தால் பணிகள் தொடங்கப்படாத நிலையில் உள்ளது. கேட்காமலேயே கொடுக்கின்ற மக்களின் முதல்வர் அவர்களின் நல்லாட்சியில், இந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கி, பணிகள் விரைவில் நடைபெறுமா ?

**அமைச்சர் கே.என்.நேரு:** கடந்த ஆண்டு அது அறிவிக்கப்பட்டிருக்கிறது. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. விரைவிலேயே tender விடப்பட்டு நிதி நிலைக்கேற்ப சிறிது தாமதம் ஏற்பட்டிருக்கிறது. நிதி நிலைக் கேற்ப இந்தப் பணிகள் தொடங்கப்படும். எனவே, விரைவாக அம்பத்தூர் பகுதியிலே அந்தத் திட்டம் தொடங்குவதற்கு உரிய முறையில் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, நிதியைப் பெற்று திட்டம் தொடங்கலாம். அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

---

### காட்டாங்குளத்தூர் தெற்கு ஒன்றியம் –

# கொண்டமங்கலம் ஊராட்சியில் சாலை அமைத்துத் தாரீர்!

## சட்டப்பேரவையில் கழக உறுப்பினர் ம.வரலட்சுமி வலியுறுத்தல்

சென்னை, ஜன.12-

சட்டப்பேரவையில் செங்கல்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ம.வரலட்சுமி எழுப்பிய கேள்வியும் அமைச்சர் எ.வ.வேலு அளித்த பதிலும் வருமாறு:-

**ம. வரலட்சுமி:** செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்குளத்தூர் தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட கொண்டமங்கலம் ஊராட்சியில் 3 கி.மீ. நீளமுள்ள முக்கியச் சாலை மிகவும் பழுதடைந்து, பயன்படுத்த இயலாத நிலையில் இருக்கின்றது. இந்த கிராமச் சாலையானது, rural roads ஆக வகைமாற்றம் செய்யப்பட்டுள்ளதால், அமைச்சர் அவர்கள் இந்தச் சாலையின் முக்கியத்துவம் கருதி, பக்கவாட்டுக் கால்வாயுடன் கூடிய சாலை அமைத்துத் தரும்படி தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.



**அமைச்சர் எ.வ. வேலு:** தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களால் இதுபோன்ற கிராமச் சாலைகளனைத்தும், மாநில நெடுஞ்சாலைத் துறை யின் மூலம் அமைக்கப்பட வேண்டுமென்று ஏற்கெனவே ஆணை பிறப்பிக்கப்பட்டு, அரசு இது வரை 4,000 கி.மீ. சாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில், மூன்று பங்கு பணிகள் நிறைவேற்றப்பட்டுவிட்டன. எஞ்சியுள்ள 25 சதவிகிதப் பணிகள் இந்த ஆண்டு நடைபெறவிருக்கின்றன. எனவே, அந்தப் பட்டியலில் இது இடம்பெறுமேயானால், அந்தச் சாலை இந்த ஆண்டே வந்துவிடும்.

ஊரக உள்ளாட்சியின் சார்பாக முதலமைச்சர் அவர்கள் 4,000 கி.மீ. சாலை அமைப்பதற்காக, நிதி ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் ஒருபுறம் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தச் சாலை மாநில நெடுஞ்சாலையில் வருமேயானால், இந்த ஆண்டு அந்தப் பணிகளை மேற்கொள்ள, நான் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

---

### பல்கலைக் கழக மாணவி விவகாரம்: அரசு நடவடிக்கைக்கு எதிராக

# பொது வெளியில் பேசுவது சட்டத்திற்குப் புறம்பானது!

## சட்டப்பேரவை வளாகத்தில் ஆர்ப்பாட்டத்திற்குப் பின் இ.பரந்தாமன் பேட்டி!

சென்னை, ஜன.12-

சட்டப்பேரவையில் வினாக்கள் விடை நேரத்தில் வெளியே வந்த தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் பரந்தாமன், தாயகம் கவி உள்ளிட்ட தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள், இவன் தான் அந்த சார் என்று அ.தி.மு.க.வின் முன்னாள் நிர்வாகி ஒருவரின் (சுதாகர்) புகைப்படத்தையும் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமியின் புகைப்படத்தையும் அடங்கிய போஸ்டர்களை காட்டி முழக்கமிட்டனர்.

பின்னர் செய்தியாளர் சந்திப்பில் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் பேசியதாவது :-

பல்கலைக்கழகத்தில் நடந்த சம்பவத்திற்கு புலன் விசாரணை நடந்து கொண்டிருக்கும் போது, விசாரணையில் சொல்லப்பட்ட வார்த்தையை வைத்துக் கொண்டு அதிகாரிகள் மீதும் ஆட்சியாளர்கள் குறிவைத்து பொது வெளியில் பேசுவது சட்டத்திற்கு புறம்பானது.



யார் அந்த சார் என பேட்ஜ் அணிந்து கொண்டும் கருப்புசட்டை அணிந்து கொண்டும் அ.தி.மு.க.வினர் சட்டப் பேரவைக்கு வந்து கொண்டிருந்தார்கள்.

நாங்களும் போனால் போகட்டும் என்று இருந்தோம். ஆனால் அவர்களின் கேள்விக்கு அரசும் பிரதிநிதிகளும் பதில் சொல்ல வேண்டிய தேவை உள்ளது.

அதனால் தான் பாவம் பார்த்து “யார் அந்த சார் என்ற கேள்விக்கு இவன் தான் அந்த சார் பதில் சொல்லி இருக்கிறோம்” என்றார்.

---





வடசென்னை பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளில் இயங்கி வரும் தொ.மு.ச பேரவை குழு மற்றும் கழக தொழிலாளர் அணியின் சார்பாக திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டிற்கு நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகளை கொண்டு வந்து பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வாழ்வளித்ததோடு தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் தமிழர்களின் முன்னேற்றத்திற்கும் தொடர்ந்து எண்ணற்ற சாதனைகளை செய்து வரும் **மாண்புமிகு முதல்வர்** அவர்களுக்கு துணையாக செயல்பட்டு வரும்

மாண்புமிகு துணை முதல்வர்

**உதயநிதி ஸ்டாலின்** அவர்களின்

**பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மருத்துவ முகாம், எளியோர்களுக்குக்கான நலத்திட்ட உதவிகள் மற்றும் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம்**

வரவேற்புரை : **S.அருண்குமார்** (GS அசோக்லேலண்ட் FD) **K.தம்பிதுரை** (அசோக்லேலண்ட் FD) **T.C.V.மணிகண்டன்** (வட்ட கழக செயலாளர்)

முன்னிலை : **தி.மு.தனியரசு** MC (திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர், 1-வது மண்டல தலைவர்) **வை.ம.அருள்தாசன்** (திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர்)

**S.பிரபாகரன்** (அசோக்லேலண்ட் FD) **M.சதீஷ்குமார்** (அசோக்லேலண்ட் FD) **க.அ.ஜாப்பர் ஜலாலுதீன்** (எம்.ஆர்.எப்) **W.செபஸ்டின் பெஞ்சமின்** (அசோக்லேலண்ட்) **B.சரவணன்** (எஸ்.ஆர்.எப்) **V. தியாகராஜன்** (கார்போரண்டம்) **K.ஜெய்சங்கர்** (எம்.எப்.எல்)

தலைமை : **மு.ராஜகாந்தம்** மாநில துணை செயலாளர், தொழிலாளர் அணி

நலத்திட்ட உதவிகளை வழங்கி - சிறப்புரை

**ஆர்.எஸ்.பாரதி** கழக அமைப்பு செயலாளர், தொழிற்சங்க தலைவர்

திராவிட மாடல் அரசின் சாதனைகள் - சிறப்புரை

பொருளாதார அறிஞர் முனைவர் **ஜெ.ஜெயரஞ்சன்** மாநில திட்டக்குழு துணை செயல் தலைவர்

மருத்துவ முகாம் மற்றும் கண் பரிசோதனை முகாமை துவக்கி வைப்பவர்

மாதவரம் **எஸ்.சுதர்சனம்** MLA (வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர்) **PTC. G.செல்வராஜ்** (மாநில செயலாளர் தொழிலாளர் அணி)

**இரா.கிரிராஜன்** MP (மாநில சட்டத்துறை தலைவர்) **கலாநிதி வீராசாமி** MP (மாநில அயலக அணி தலைவர்) **K.P. சங்கர்** MLA (மீனவர் அணி மாநில துணை தலைவர்) **K.சசிகுமார்** (மாநில தலைவர் தொ.மு.ச .மி.வா)

**V.கவி கணேசன்** (தலைமை கழக வழக்கறிஞர்) **இரா.பத்மநாபன்** (மாநில மீனவர் அணி து.செயலாளர்) **ப.மதிவாணன்** (தலைமை செயற்குழு உறுப்பினர்) **வி.இராமநாதன்** (தலைமை செயற்குழு உறுப்பினர்) **குறிஞ்சி S.கணேசன்** (மாவட்ட அவைத்தலைவர்)

**M.ஆனந்தன்** (மாவட்ட பொருளாளர்) **இரா.முருகேசன்** (பொதுக்குழு உறுப்பினர்) **டி.ஏ.ராஜ்** (பொதுக்குழு உறுப்பினர்) திருமதி **சாந்தி பக்தன்** (பொதுக்குழு உறுப்பினர்) **R.C.ஆசைதம்பி** (பகுதி அவைத்தலைவர்) **K.P.சொக்கலிங்கம்** (மாமன்ற உறுப்பினர்)

**T.C.V.ராஜகுமாரி** (மாமன்ற உறுப்பினர்) **M.V.குமார்** (பகுதி து.செயலாளர்) **K.பிரபாவதி** (பகுதி து.செயலாளர்) **இரா.குமரேசன்** (பகுதி பொருளாளர்) **வை.நந்திவர்மன்** (மா.பி.)

நாள் : **12.01.2025** நேரம் : **காலை 10.00 மணி**
இடம் : **பவுண்டிரி தொழிற்சங்க கட்டிடம், திருவொற்றியூர்**

கழக தொழிலாளர் அணி மாநில துணை செயலாளர்கள்

**பிடிசி.வெ.பாலு ராஜா குப்புசாமி** கொல்லாபுரம் **ச.ராஜேந்திரன் ஆர்.வரதன்**
சேலம் **சி.காசி** கோவை **நா.தமிழ்செல்வன்** கரூர் **பெ.விஜயகுமார் அ.பாஸ்கர்**

தொழிலாளர் அணி மாவட்ட நிர்வாகிகள் **மா.வெ.நா.உதயகுமார் S.குமார் காஞ்சி சு.மதிவாணன்**

தொ.மு.ச.பேரவைக்குழு நிர்வாகிகள்

அசோக்லேலண்ட் FD : J.டேவிட் அமலநாதன் E.செல்வ விநாயகம் M.மாதவன் D.பெருமாள் D.வெங்கடேசன் M.தட்சிணாமூர்த்தி A.அலோசியல் அமல்ராஜ் I.D.ரமேஷ் A.கோபி J.முனிர் S.குமார் G.முத்து குமார் M.கேசவன் E.ரவிகுமார் L.கதிரேசன்

எஸ்.ஆர்.எப் : R.சதீஷ் J.கார்த்திக் S.G.சாய்மோகன் P.மதன் குமார்

அசோக்லேலண்ட் : S.பரமசிவன் S.டில்லி ஆனந்த் G.C.கிரி பாபு E.ரமேஷ் M.சந்திரசேகர்

எம்.ஆர்.எப் : கு.முருகேசன் ச.கோவேந்தன் கோ.வீ.நரேஷ்குமார் ப.செல்லபாண்டி செ.கண்ணன் அ.சூடாமணி இரா.தியாகராஜன் செ.மகேஷ் செ.முரளி இரா.ரோஸ்குமார் ஜெ.கோவிந்தராஜ்

கார்போரண்டம் யுனிவர்செல் : V.செந்தில்வேல் S.காந்தி P.மகேஷ் R.காசிவிஸ்வநாதன் R.அண்ணாத்துரை N.ராஜா முருகவேல் C.D. முரளி

எம்.எப்.எல் : K.ஜெய்சங்கர் S.ஆனந்தன்

நிகழ்ச்சி ஏற்பாடு

தொழிற்சங்க தலைவர் **மு.ராஜகாந்தம்**
மாநில துணை செயலாளர், தொழிலாளர் அணி

நன்றியுரை : **R.காட்டு ராஜன்**

**கழக தொழிலாளர் அணி**